41

சுருக்கம்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – சத்துணவு பயனாளிகளில் 2 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களில் சத்துணவுடன் சேர்த்து வழங்கப்படும் முட்டையினை சாப்பிடாத மாணவ மாணவியர்கள் மற்றும் குழந்தைகளுக்கு மாற்று உணவாக வாழைப்பழம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி3) துறை

அரசாணை (நிலை) எண்.85

திருவள்ளுவர் ஆண்டு 2039
ஆனித்திங்கள், 30ஆம் நாள்
நாள் 14–07–2008

படிக்கப்பட்டது ::

1. அரசாணை (நிலை) எண்:69, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 11.5.2007.
2. அரசாணை (நிலை) எண்:105, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22.6.2007.

மேலும் படிக்கப்பட்டது ::

3 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குநரின் கடித எண்.7481/சஉதி2/2008, நாள் 09-07-08.

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் 2 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படும் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15, 2007 முதல் வாரம் மூன்று முறை சத்துணவுடன் வேக வைத்த முட்டை திங்கள், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் 72 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். இரண்டில் படிக்கப்பட்டுள்ள அரசாணையின்படி சத்துணவுத் திட்டத்தின் கீழ் 1 முதல் 2 வயது வரையிலான சிறார்களுக்கு வாரம் ஒரு வேக வைத்த முட்டை புதன்கிழமைகளில் வழங்கவும் ஆணையிடப்பட்டது. இதன் மூலம் 2.40 இலட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள்.

2. மத்திய அரசின் மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டம் நன்கு செயல்படுத்தப்பட்டு வருவது குறித்தும், இத்திட்டத்தின் வாயிலாக குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைவினை சரி செய்து மேலும் சிறப்பாக நடைபெற எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளையும், தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் வாரம் மூன்று முறை சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டம் பற்றியும் பாராட்டியுள்ளார். மேலும் முட்டை உட்கொள்ளாத சத்துணவு பயனாளிகளுக்கு மாற்று உணவு வழங்கலாம் என்று ஆலோசனை தெரிவித்துள்ளார்.

3. அதன் அடிப்படையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குநர் அவர்கள் அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துருவில் சத்துணவு திட்டத்தின்கீழ் வழங்கப்படும் முட்டையினை உட்கொள்ளாத பயனாளிகளுக்கு மாற்று உணவாக இது நாள்வரை ஏதும் வழங்கப்படுவதில்லை என்றும், சத்துணவில் முட்டை உட்கொள்ளாத பயனாளிகளுக்கு முட்டைக்கு பதிலாக மாற்று உணவாக சுமார் 100 கிராம் எடையுள்ள வாழைப்பழம் கொடுக்கலாம் என்றும், தற்போது இத்திட்டத்தின்கீழ் முட்டை உட்கொள்ளாத பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 90,000 மட்டுமே என்றும் தெரிவித்துள்ளார்.

4. வாழைப்பழமானது விரைவில் அழுகும் தன்மை கொண்டதாகவும், நீண்ட நாள் பாதுகாக்கப்பட முடியாததாகவும் நீண்ட தூரம் போக்குவரத்து மூலம் எடுத்துச் சென்று கொடுக்க முடியாத நிலை உள்ளதாலும், வாழைப்பழம் அந்தந்த பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள் / அங்கன்வாடி பணியாளர்கள் மூலமாகவே அந்தந்த ஊர் / மையம் அருகிலேயே கொள்முதல் செய்து நேரடியாக (decentralized procurement of banana) பயனாளிகளுக்கு அளிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

5. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட இயக்குநரின் கருத்துருவையும் வாழைப்பழத்தின் ஊட்டச்சத்தின் அளவு, (nutritive value) விலை (cost effectiveness), தரம் (quality) அதனை வைத்து உண்பதற்கு ஏற்ற கால அளவு (shelf life) மற்றும் ஆண்டு முழுவதும் எளிதில் கிடைப்பது ( availability) ஆகியவைப் பற்றியும் அரசு நன்கு பரிசீலனை செய்த பின்னர் இக்கருத்துவினை ஏற்று சத்துணவில் முட்டை உட்கொள்ளாத பயனாளிகளுக்கு மாற்று உணவாக வாழைப்பழம் வழங்கலாமென அரசு முடிவு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது:-

1. சத்துணவுத் திட்டத்தில் முட்டை சாப்பிடாத குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு (2 முதல் 15 வயது வரையில் பயனாளிகள்) மாற்று உணவாக சுமார் 100 கிராம் எடையுள்ள ஒரு வாழைப்பழம் (ripened banana) திங்கள், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் வழங்க வேண்டும். ஒரு வாழைப்பழத்தின் விலை ரூ.1.25க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. சத்துணவு அமைப்பாளர்கள் / அங்கன்வாடி பணியாளர்களே காய்கறி, தாளிதம் போன்ற பொருட்களை தற்போது உள்ளூர் சந்தையில் வாங்கி வழங்குவதைப் போன்றே பூவன் பழம், பச்சைப் பழம், மலைப்பழம், கற்பூரவல்லி மற்றும் ரஸ்தாளி போன்ற வாழைப்பழங்களை வாங்கி வழங்க வேண்டும்.



51

43

6. மேலே பத்தி 5 இல் உள்ள ஆணையின்படி வாழைப்பழம் வழங்குவதற்கான செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படவேண்டும் :-

| கணக்குத் தலைப்பு | தொகை (ரூபாயில்) |
|---|---|
| 2236 – சத்துணவு -02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 – மதிய உணவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் – JT – சீர்மரபினர் பள்ளிகளிலுள்ள 10 முதல் 15 வயதுடைய ஏழை குழந்தைகளுக்கு உணவளிக்கும் புதிய திட்டம் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம் (தா.தொ.கு. எண்.2236 – 02- 102- JT- 6789) | 19,000/- |
| 2236 – சத்துணவு -02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 – மதிய உணவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் -II மாநிலத் திட்டம் – KL – 5 முதல் 9 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம் (தா.தொ கு. எண்.2236 – 02 -102- KL- 6784) | 48,48,000/- |
| 2236 – சத்துணவு -02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 – மதிய உணவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – KM – சீர்மரபினர் பள்ளிகளிலுள்ள 5 முதல் 9 வயது வரையுள்ள ஏழை குழந்தைகளுக்கு உணவளிக்கும் புதிய திட்டம் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் –08 வாழைப்பழம் (தா.தொ கு. எண்.2236 – 02 -102- KM- 6782) | 46,000/- |
| 2236 – சத்துணவு -02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 – மதிய உணவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் – KN – அரசுப் பள்ளிகளிலும் அரசு மானிய உதவி பெறும் பள்ளிகளிலும் உள்ள 10–14 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம் (தா.தொ கு. எண்.2236 - 02- 102 -KN 6780) | 25,00,000/- |
| 2236 – சத்துணவு -02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 – மதிய உணவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் – KO – புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை சேர்ந்த குழந்தைகளுக்கு உணவளித்தல் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம் (தா.தொ கு. எண்.2236- 02- 102- KO- 6788) | 2,05,000/- |
| 2236 – சத்துணவு -02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 – மதிய உணவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் – KP - மாநகராட்சி மற்றும் நகராட்சி பள்ளிகளில் 5 முதல் 9 வயதுள்ள குழந்தைகளுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம் (தா.தொ கு. எண்.2236 – 02 -102- KP- 6786) | 5,00,000/- |
| 2236 – சத்துணவு -02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 – மதிய உணவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் – KQ – மாநகராட்சி, நகராட்சி பள்ளிகளில் 10–14 வயதுடைய குழந்தைகளுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – 67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 வாழைப்பழம் (தா.தொ கு. எண்.2236 – 02- 102- KQ -6784) | 1,82,000/- |



52

| | |
|---|---|
| 2236 – சத்துணவு -02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 102 – மதிய உணவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் – KI – புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர்க்கு முட்டைகள் வழங்குவதற்காகத் தொகை கொடுத்தல் - 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 – வாழைப்பழம். (தா.தொகு.கு. எண்.2236 – 02 – 102-KI 6780) | 13,40,000/- |
| 2236 – சத்துணவு -02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் – 789 – ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் - JH – சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர்க்கு முட்டைகள் வழங்குவதற்காக தொகை கொடுத்தல் - 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 08 – வாழைப்பழம் (தா.தா.கு. எண்.2236 -02– 789 JH - 6789) | 3,60,000/- |
| மொத்தம் | 1,00,00,000/- |

7. மேலே பத்தி-5ல் வழங்கப்பட்ட ஆணையினை செயல்படுத்த இந்த நிதியாண்டில் ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) கூடுதல் செலவினம் மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது. இந்த கூடுதல் செலவினம் ஒரு "புதுப்பணிக்" குறித்த செலவினமாகும். இதற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் இதற்கான ஆணை நிதி (வ.செ.1) துறையிலிருந்து தனியே வெளியிடப்படும். இதற்கென உரிய படிவத்தில் அரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குநர் அவர்கள் மேலே பத்தி – 6ல் கூறப்பட்டுள்ள கணக்குத் தலைப்புகளை மதிப்பீடு செய்யவும் (budgeting) நிர்வகிக்கவும் (estimating) ஒத்திசைவு செய்யவும் (reconciling) மற்றும் ஒட்டுமொத்த அதிகாரமும் (overall control) அளிக்கப்படுகிறது.

8. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலை திங்கள் 15ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று கொண்டாடப்படும் என இந்த அரசு அறிவித்துள்ளதையொட்டி, அந்நாள் முதல் இத்திட்டத்தினை சமூகநல ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குநர், மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோர் செயல்படுத்திட விரைவான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.



53

9. இவ்வரசாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண் 131/SS(AP)/2008 நாள் 14/07/2008ல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் (ASL No.411 நானூற்று பதினொன்று )

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்,
சென்னை 113.
சமூக நல ஆணையர், சென்னை 5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை–15
இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை 8.
இயக்குநர், தொடக்கக் கல்வித் துறை, சென்னை 8.
மாநில கணக்காயர், சென்னை–18
ஆணையர், சம்பளம் மற்றும் கணக்கு துறை, சென்னை 15.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள், சென்னை 3/15/35
(மற்றும் மதுரை)
தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கை தலைவர், சென்னை 2
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (சென்னை மாநகராட்சி உட்பட)

நகல்
நிதி (வரவு செலவு /பொ. I & II/ ச.ந.) துறை, சென்னை 9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9
பள்ளிக் கல்வித் துறை, சென்னை 9.
சமூக நலம் (ம) சத்துணவு திட்டத் (சந2) துறை, சென்னை 9.
தலைமைச் செயலக அனைத்து துறைகள்
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,சென்னை–9
அனைத்து பிரிவுகள் – சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

தா./-